# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **149/2023** |
| **PW1 –** | **J.ரஹமத்துல்லா** |
| தந்தை பெயர் | **ஜமால் முகமது** |
| **வயது** | **35/2025** |
| முகவரி | **2/776, புதுமனைத்தெரு, மல்லிப்பட்டினம்** |
| தாலுக்கா | **பட்டுக்கோட்டை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **05th day of August 2025**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 1:05 PM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை (PW1 cross was allowed vide Crlmp 1275/2025 )**

**எதிரி ஆஜர்**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. S. குமார், (பலகை எழுத்தர் நிலை-3) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால், M.BA Discontinued. நான் M.BA Discontinued செய்த விபரத்தை, நான் எனது புகார் மனுவிலோ அல்லது நிருபன வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. என்னுடைய முதல் விசாரணையை, நான் படித்துப்பார்த்துதான் கையெழுத்து இட்டேனா என்றால், நான் படித்துப்பார்த்துதான் கையெழுத்து இட்டேன், ஆனால் அந்த முதல் விசாரணையை முழுவதுமாக நான் படித்துப்பார்க்கவில்லை, ஏனென்றால், அதை நான் எனது Mobile ல் Deposition Copy யை பார்க்கும்போது பிழை இருப்பதை கண்டுள்ளேன்.

2. நான் எனது முதல் விசாரணையில் நான் வசித்து வருவதாக கூறிய 2/776, புதுமனைத்தெரு, மல்லிப்பட்டினம் என்ற முகவரியைதான் நான் இந்த குறுக்கு விசாரணையின்போது சொல்லியுள்ளேனா என்றால், ஆமாம்.

3. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட முகவரியும், குறுக்கு விசாரணையில் குறிப்பிட்ட முகவரியும் வெவ்வேறு என்று சொன்னால், சரியல்ல.

4. நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால், Arafa Tour and Travels நடத்தி வருகிறேன். நான் Arafa Tour and Travels என்ற Travels ஐ நடத்தி வருகிறேன் என்ற விபரத்தை, நான் எனது புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்று சொன்னால், கூறியுள்ளேன். நான் எத்தனை வருடமாக Arafa Tour and Travels நடத்தி வருகிறேன் என்று சொன்னால், சுமார் 15 வருடங்களாக நடத்தி வருகிறேன். நான் Arafa Tour and Travels சுமார் 15 வருடங்களாக நடத்தி வருகிறேன் என்ற விபரத்தை எனது புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்று சொன்னால், கூறவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால், எழுதப்படிக்க தெரியும். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்படிக்க தெரியுமா என்றால், தமிழ் எனக்கு எழுதப்படிக்க தெரியும், ஆனால் ஆங்கிலத்தில் ஓரளவிற்குதான் தெரியும்.

5. புகார்தாரருக்கு ஒரு காகிதத்தில், கற்றறிந்த எதிரியின் வழக்கறிஞர் 1. Three Lakhs And Eight Thosand only என்ற வார்த்தைகளையும், 2. 380000 என்ற எண்களை புகார்தாரரிடம் எழுதி நீதிமன்றத்திற்கு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஒரு ஆவணமாக நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அதை நீதிமன்ற ஆவணமாக **EX-C1 ஆக** குறியீடுசெய்யப்படுகிறது.

6. எதிரியை எத்தனை நாட்களாக எனக்கு தெரியும் என்றால், எனக்கு 3 வருடங்களாக தெரியும். எனக்கு 3 வருடங்களாக தெரியும் என்ற சங்கதியை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, முதல் விசாரணை ஆகியவற்றில் கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன்.

7. எதிரியானவர் என்னிடம் எந்த தேதியில், எப்போது, எந்த இடத்தில் வைத்து பணம் கேட்டார் என்ற விபரத்தை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, முதல் விசாரணை ஆகியவற்றில் கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன்.

8. எதிரியானவருக்கு எங்கு வைத்து நான் பணம் கொடுத்தேன் என்றால், என் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்த சமயத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால், ஷேக் முகைதீன் என்பவர் இருந்தார், ஷேக் முகைதீன் என்பவர் எதிரியுடன் வந்தவர் ஆவார். ஷேக் முகைதீன் எனக்கு எப்படி தெரியும் என்றால், அவர் என் ஊரைச்சார்ந்தவர் ஆவார். ஷேக் முகைதீன் என்னுடைய உறவினரா, நன்பரா என்றால், எனக்கு அவர் பழக்கம். ஷேக் முகைதீன் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்று சொன்னால், சுமார் 1 கி.மீ முதல் 2 கி.மீ இருக்கும். ஷேக் முகைதீன் என்பவர் எனக்கு எப்படிப்பட்ட பழக்கம் என்றால், சாதாரண பழக்கம்தான். நானும், ஷேக் முகைதீன் ஒரே ஜமாத்தின் கீழ்தான் வருகிறோமா என்றால், ஒரே ஜமாத்தில் தான் வருகிறோம்.

9. ஷேக் முகைதீன் என்பவர் ஒரே ஊரை சார்ந்தவர் என்பதாலும், ஒரே ஜமாத்தின்கீழ் வருவதாலும், எனக்கு நல்ல பழக்கம் உண்டு என்றும் நான் நீதிமன்றத்திற்காக அவரை சாதாரண பழக்கம் என்றும், எதிரிக்கு எதிராகவும், எனக்கு ஆதரவாகவும் சாட்சி அளித்துள்ளார் என்று கூறினால், அப்படியில்லை.

10. எதிரி, என்னிடம் பணம் பெறும்போது ஷேக் முகைதீன் என்ற நபர் என் வீட்டில் இல்லை என்று சொன்னால், சரியல்ல.

11. எதிரியும் ஷேக் முகைதீன் என்பவரும் நல்ல பழக்கம் என்று சொன்னால், எனக்கு தெரியாது.

12. எதிரியானவருக்கு ஷேக் முகைதீன் என்ற நபரை தெரியவே தெரியாது என்று சொன்னால், சரியல்ல.

13. ஷேக் முகைதீன் என்ற நபருக்கு எதிரியின் வீடு எங்கு இருக்கிறது என்ற விபரம் தெரியுமா என்று சொன்னால், அதைப்பற்றிய விபரம் எனக்கு தெரியாது.

14. ஷேக் முகைதீன் என்ற நபரை வைத்துக்கொண்டுதான் எதிரியானவர், என்னிடம் பணம் கேட்டார் என்ற விபரத்தினை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, முதல் விசாரணை ஆகியவற்றில் கூறியுள்ளேனா என்றால், என்னுடைய முதல் விசாரணையில் மட்டும்தான் கூறியுள்ளேன்.

15. எதிரியானவர் என்னிடம் எப்போது, எங்கு வைத்து காசோலை கொடுத்தார் என்றால், 30.05.2023 அன்று எதிரியானவர் என்னிடம் பணம் பெற்றுக்கொண்டு, 02.08.2023 என்ற பின்தேதியிட்டு பூர்த்திசெய்த, கையொப்பம் இட்ட ஒரு காசோலையை என் வீட்டில் வைத்து கொடுத்தார்.

16. காசோலையை எதிரியானவர் பூர்த்திசெய்து கொடுக்கவில்லை என்றும், அதில் அவர் கையொப்பம் இட்டு கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல, அதை நான்தான் எழுதி பூர்த்திசெய்துகொண்டேன் என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் கையெழுத்தை காசோலையில் முன்பக்கத்தில் மட்டும் போட்டாரா அல்லது பின்பக்கத்தில் மட்டும் போட்டாரா என்றால், இரண்டு பக்கத்திலும் கையொப்பமிட்டு கொடுத்தார்.

**<u>முடிக்கப்பட்ட நேரம் 02:05</u> PM**

**(கற்றறிந்த எதிரியின் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. மா. விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.